# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 3 July 2019*

கோட்டை :1 வாயில்:3 ஜூலை 2019

அரண் Aran
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் International e Journal of Tamil Research

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் K.முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஸ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் P.பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


**கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு**
முனைவர் வாணி அறிவாளன்

**புறப்பொருள் வெண்பாமாலை வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகள்**
முனைவர் க.லெனின்

**ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை,

**குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு**
முனைவர் தி.மணிமொழி

**சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் காட்சிப்படிமம்**
து. உமாமகேஸ்வரி

**பதினெண் கீழ்க்கணக்கில் இருவாழ்விகள்**
திருமதி ச.மீனாட்சி

**தமிழ்ச் சிறுகதைகளின் மாறுபட்ட சமூகநிலைகளும் பின்புலங்களும்**
முனைவர். வி.கலாவதி

**தமிழ் நாடகங்களின் விளம்பர உத்திகள்**
முனைவர்.க. தினகரன்

**இணையத்தில் தமிழ் மொழியின்பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒருங்குறியீட்டு முறை**
இரா.அருணா,

**தமிழ் மின் அகராதிகள் (E-Dictionaries in Tamil)**
முனைவர் மா.ரமேஷ் குமார்

**நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்**
முனைவர் சீ. இளையராஜா

**சிறுதெய்வவழிபாட்டுமுறைகளில் மக்களின் எண்ணங்கள்**
முனைவர் தே. அசோக்

# அகத்தினுள்

INCORPORATION & MANIFESTATIONS OF 'SATI ELEMENTS' WITHIN THE HERO-STONES OF WESTERN TAMILNADU
**Dr. C.Maheswaran**

Neolithic Grooves found at Keezanur, Javadi hills of Tamil Nadu
**Dr. R.Ramesh**

பழந்தமிழர் பண்பாட்டில் தோல் ஓவியத்தின் பயன்பாடு
**ஓவியர். கு. கவிமணி**

Recent Archaeological Explorations in Shervarayan Hills, Tamil Nadu
**-Dr. Priyakrishnan**

ஈழப்பாண்டியன் சேந்தன் மாறன் காசு
**இராஜ சுப்பிரமணியன்**

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளின் வழிபாட்டு மரபுகள்
**கோ.சதீஸ்**

தமிழகப்பழங்குடிகளின் தெருக்கூத்து அமைப்புமுறை
**முனைவர் ரே.கோவிந்தராஜ்**

உயிரியல்மற்றும் சமூகமொழியியல் பார்வைகளில் பாரதியாரின் தேசீயப் படைப்புகளின்பகுப்பாய்வு
[Biolinguistics and Sociolinguistics Approach towards Nationality in Bharathiar Patriotic Poems]
**முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா**

முகப்பு
**மராத்திய நடன மங்கை (தோல் பாவை)**



# தமிழ்

# தமிழ்ச்சிறுகதைகளின் மாறுபட்ட சமூக நிலைகளும் பின்புலங்களும்

முனைவர். வி.கலாவதி

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த் துறை தலைவர்

இராஜூக்கள் கல்லூரி

இராஜபாளையம்.

**ஆய்வுச் சுருக்கம்**

அன்றாடம் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையினைச் சிறுகதையின் வாயிலாக உணர்த்த முடியும். சமூகத்தில் ஏற்படும் சிக்கல்கள், உறவுநிலை பிறழ்வுகள், மனச்சிதைவுகள் என ஆங்காங்கே காணக்கிடக்கின்றன. அப்படிப்பட்ட நிகழ்வினைத்தான் ஆசிரியர்களும் படைப்புகளாக வெளியிடுகிறார்கள். குடும்பத்தில் பின்னிபிணைந்து கிடக்கும் பெண்கள் நாள்தோறும் சந்திக்கும் போராட்டங்களையும் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடும் மனநிலையும் ஏற்றத்தாழ்வுகளையும் உள்ளமைத்து இவ்வாய்வு நகர்கிறது. அவ்வகையில் புதுமைப்பித்தன், சு.தமிழ்ச்செல்வன், ஜெயகாந்தன் போன்றோரின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது முன்வைக்க முயல்கிறது.

**திறவுச் சொற்கள்**

மாறுபட்ட சமூகநிலை - கருப்பசாமியின் அய்யா - யுகசந்தி - ஏற்றத்தாழ்வு - சு.தமிழ்ச்செல்வன் -ஜெயகாந்தன் -புதுமைப்பித்தன்.

**முன்னுரை**

இன்றைய தமிழ் இலக்கியங்களில் பல வடிவங்கள் தோன்றி காலத்திற்கு ஏற்றார் போல வளர்ந்து வருகின்றன. அதில் இன்றியமையாத இடத்தைப் பெறுவது சிறுகதையாகும். தமிழில் சிறுகதையின் வளர்ச்சிக்கு மணிக்கொடி, தீபம், கலைமகள், கணையாழி, காலச்சுவடு, சக்தி, சரஸ்வதி எழுத்து போன்ற இதழ்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளன. சிறுகதை ஆளுமைகளின் பங்களிப்புகள் கூட இதழ்களின் வளர்ச்சிக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்துள்ளன எனில் அது மிகையாகாது அந்த வகையில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், சு.தமிழ்செல்வன் மூவரின் சிறுகதைளில் சமூக நிலைகளும் அதன் பின்புலங்களையும் வேறுபட்ட தன்மை உடைய கருத்தாக்கங்களையும் அடியொற்றி படைக்கப்பெற்ற சிறுகதைகைளை இவ்வாய்விற்கு முதன்மைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**சமூக நிலை**

சமூகம் என்பது பற்றிய ஆய்வு இல்லாத கோட்பாட்டியல் இல்லை. எல்லா வகையான கோட்டுபாடுகளும் சமூகத்தை மையமிட்டே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் சமூகம் என்பது பற்றி அறிஞர்கள் கூறுகையில், “சமூகவியலில் சமூகம் (Society), சமுதாயம் (Communityல) என்று இரு வேறு கலைச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. குறிப்பிட்ட இடத்தில் பெருந்திரளான மக்கள் கூடி வாழ்வதைச் சமூகம் என்கின்றனர்”[1] இத்தகைய சமூகத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் சமுதாயம் பற்றிய இலக்கியங்கள் ஏராளம். மனித வாழ்வோடு இரண்டறக்கலந்த சூழ்நிலைகளை உலகிற்கு வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்ட கருவியான இலக்கியங்களில், உரைநடை வாயிலான சிறுகதை என்னும் களம் சிறப்பிடம் பெறுகின்றது. சிறுகதைகளை வாசிக்கும் தோறும் நம்மோடு பழகிய (அல்லது) பார்த்த மாந்தர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மை உடைய பதிவுகளை சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகின்றன. சமூகத்தின் அங்கம் குடும்பம் அத்தகைய குடும்பங்கள் பற்றி, “குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள் என்ற உறவுகளின் அடிப்படையில் கூடி வாழ்வாதாகும் இக்குடும்பம்

குழந்தைகள் இன்றியும் அமையும் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் என்ற சடங்குமூலம் உருவாகும் அமைப்பே குடும்பம் என பெறும்"[2] என்கிறார்.

இத்தகைய குடும்பம் சார்ந்த கருத்து நிலைகள் ஏராளம் சமூகத்தில் குடும்பம் என்னும் அங்கத்தில் ஜெயகாந்தன், சு.தமிழ்ச்செல்வன் கதைகளில் காணலாகும் மாறுபட்ட கருத்தமைவுகளை இக்கட்டுரையில் காணலாம்.

**புதுமைப்பித்தனின் கோபாலய்யரின் மனைவி**

குடும்பம் என்பதில் பிள்ளைகள் இன்றியும் அமையும் என்பதை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு, சமூகம் சார்ந்த நோக்கில் இந்தக் கதை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. டெப்டிக் கலெக்டர் கோபாலய்யர் - அவரின் இளம் மனைவி மீனாட்சி. இக்கதையில் சமூகம் என்பது சமுதாயமாகப் பார்க்கப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை ஏற்படுத்துகின்றது. கோபாலய்யர் அந்தணர் சமுதாயத்தைச் சார்ந்தவர் அவர் மனைவி (இரண்டாம் தாரம்) மீனாட்சி, கோனார் சமுதாயத்தைச் சேர்ந்தவள். இருவருக்கும் திருமணமானாலும் உடலால் ஒன்றுபட்டவர்கள், உணவர்வால் வேறுபட்டார்கள். களவு செய்வதற்காவே அய்யருக்கு மனைவி தேவை. எனவே, ஏழை வீட்டுப் பெண்ணான மீனாட்சியைச் சாதி பார்க்காமல் சைவ உணவுப் பிரியரான அய்யர் மணம் செய்து கொண்டார். அசைவ உணவு விரும்பும் மீனாட்சிக்கு மதுவை ஊற்றிப் பழக்கப்படுத்தினார். மீனாட்சியே அய்யருக்கு மதுவோடு அசைவ உணவைப் பழக்கப்படுத்தினாள். எனவே இருவரும் போதையிலும், சல்லாபத்திறும் எவ்வேளையும் இருந்ததாகக் கதையை முடிக்கின்றார் புதுமைப் பித்தன். இவ்வகையான கதைகள் புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தில் உண்மை நிகழ்வுகளாக இருந்திருக்க வாய்ப்புகள் அதிகமுண்டு. இ;ன்றைய தொழில் நுட்பம் உலகில் இது போன்ற நடவடிக்கைகள் அப்பட்டமாக வெளிப்பட்டு விடுகின்றன. அன்றைய காலத்தில் ஆர்வமாக கேட்கப்பட்ட இது போன்ற கதைகள் இன்று கேலிக் கூத்துகளாக அவலமாக இணையங்கள் செய்திகள் மூலம் வெளிப்படுகின்றன. மக்களின் வாழ்வியலில் ஒழுக்கம் என்னும் உயரியப்பண்பை வளர்க்கும் கூடமாக குடும்பங்கள் திகழ வேண்டும். இதுபோன்ற குடும்பங்கள் சமூகத்தின் அங்கமாகச் சுட்டமுடியாது. அவலமாகவே கருத வேண்டும்.

**குடும்ப வளர்ச்சியில் சு.தமிழ்செல்வனின் 'கருப்பசாமியின் அய்யா' எனும் கதை**

குடும்பத்தில் உள்ள உறவுகளின் எண்ணிக்கைக்கு ஏற்பக் குடும்பத்தைக் தனிக்குடும்பம் (அல்லது) கூட்டுக் குடும்பம் என்று பிரிப்பர் இக்கதை தனிக்குடும்பம் சார்ந்த கதையாக சு.தமிழ்ச்செல்வன் சுட்டிக் காட்டுகின்றார் கருப்பசாமி என்னும் இளைஞன் யார் சொல்லுக்கும் அடங்காதவனாக முரட்டுக்குணமும், விளையாட்டுப் போக்கும் அதிகம் உடையவனாகக் காணப்படுகின்றான். அவன் அப்பா அவனுக்கு திருமணம் செய்தால் சரியாகிவிடும் என்று எண்ணி திருமணம் செய்து வைக்கிறார். ஆனால் திருந்தியபாடில்லை. அவன் மனைவி கணவனின் ஊதாரி தனத்தை எண்ணிக் கவலைப்படுகின்றாள். எனவே, ஊரை விட்டு வெளியூக்கு வேலைக்கு அனுப்பி வைக்கின்றாள். வெளியூர் சென்றவன் நிறைய சம்பாதித்து வருவான் என்ற எதிர்பார்ப்புடன் மனைவி இருப்பாள். ஏழு வருடங்களுக்குப் பிறகு ஊருக்கு வரும் கருப்பசாமியின் அய்யா வெறும் 33 ரூபாய் மட்டுமே ஈட்டி வருவான். அவளால் அதை ஏற்றுக் கொள்ள இயலாது நாள்தோறும் சண்டை போடுவாள். கடைசியில் அவள் வீட்டில் பலகாரக் கடை நடத்தி அதன் மூலம் குடும்பம் நடத்துவாள். அதை வைத்து வாழ்க்கையில் முன்னேறுவார்கள் என்று கதையை சு.தமிழ்ச்செல்வன் நகர்த்தி செல்கின்றார்.

ஒரு பெண், குடும்ப பாரத்தைச் சுமந்து குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் பொறுப்புடையவளாக இருக்கின்றாள். அது மட்டுமின்றி, கணவன் பொறுப்பில்லாதவனாக இருக்கும் பட்சத்தில் பெண் தான் குடும்பத்தை வழி நடத்தி துன்பத்தை உணர்ந்து

வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கருப்பசாமியின் அம்மா மூலம் சமூகத்திற்கு உணர்த்துகின்றார். இன்றைய காலச் சூழலில் பெண்கள் வாழ்வதற்கு வழி தெரியவில்லை என்று கூறி தவறான வழிகளில் பொருளீட்டிக் கொண்டிருக்கும் காலச் சூழலில் இப்படிப்பட்ட நேர்மையான உழைக்கும் தன்மை உடைய பெண்கள் பாரட்டிற்குரியவர்கள். "குடும்பத்தில் கணவன் தன் விருப்பம் போல் செலவுகள் செய்வதைக் கண்டு அஞ்சும் பெண் கதை மாந்தர்களை இரண்டு கதைகளில் காணமுடிகிறது"[3] என்கிறார் இராமன். பெண் என்பவள் முன்னேற்றத்திற்கான வழி முறைகளை ஆணுக்கு வழங்கும் ஊக்கச் சக்தியாகத் திகழ்கின்றாள். ஆண், பெண் சமம் என்பதை நிரூபித்துக் காட்டும் ஆளுமை உடையவள் என்பதை கருப்பசாமியின் அய்யா கதை மூலம் சு.தமிழ்ச்செல்வன் சுட்டிக் செல்கின்றார்.

**ஜெயகாந்தனின் யுகசந்தியில் பெண்ணியம்**

முற்போக்கு சிறுகதைகளை எழுதுவதில் சிறந்த ஜெயகாந்தன், பெண்களின் வாழ்வியலைச் சமூகத்தோடு, மாறுபட்ட கோணத்தில் எதிர்மறைக் கருத்துகளின் மூலம் நேர்மறையான கருத்தியலைக் கொண்டு சேர்க்கும் திறம் பெற்ற படைப்பாளி. இவருடைய யுகசந்தி என்னும் கதையில், வரும் கணேசய்யர் மகள் கீதா கடிதத்தின் மூலம் தன் வாழ்வை தான் தேடிக் கொண்டதாக அதாவது (இரண்டாம் தாரவாழ்வை) கணேசய்யருக்குத் தெரியப்படுக்கின்றாள். ஆனால் அதை அவளது தந்தை கணேசய்யர் ஏற்கவில்லை. இக்கதையில், வரும் கௌரியம்மாள் பாட்டி தன் பேத்தியின் வாழ்வும் தன்னுடைய வாழ்க்கை போல் சீரழிந்து விடக் கூடாது எதெல்லாம் தனக்கு கிடைக்கவில்லையோ? மறுக்கப்பட்டதோ அவையொல்லாம் தன் போத்தி கீதாவிற்கு கிடைக்க வேண்டும் என்னும் மனப்பக்குவம் உடையவளாய் இருக்கின்றாள். சமுதாய இருளில் அகப்பட்டு விடக்கூடாது என்ற எண்ணம் உடைய கௌரிப்பாட்டியின் மனநிலை மூலம் ஜெயகாந்தன் வாசகர் மனதில் இடம் பெறுகின்றார்.

"மரபுப்பிடிப்பு சமூகத்தில் இறுக்கமாக நிலவிய காலச் சூழலின் வெளிப்படாகவே நாவல்களில் இடம் பெறும் சித்தரிப்புகளும் அமைந்திருக்கின்றன. மேற்குறித்த வழக்கங்கள் ஆதரிக்கப்படாத நாவல்கள் நடப்பியல் நிலையில் காட்டிய போதும் படைப்பாளிகள் அவற்றுக்கு எதிரான கருத்துக்களுக்கே அதிக அழுத்தம் தந்து பாதிக்கப்பட்ட பெண்கள் மீது அனுதாபம் தோன்றும் வகையில் தன் படைப்புகளை உருவாக்கியுள்ளன"[4] என்பது குறிப்பிடத்தக்கது. சுசிலா என்பவர் மேற்கண்ட கூற்று நாவலுக்க மட்டுமல்ல சிறுகதைக்கும் பொருந்திப் பார்க்கக்கூடியதே. மரபுப்படிப்பு என்னும் சொல்லாடலில் இருக்கும் இறுகிய மனப்போக்கின் தன்மையை, சமூகம் தளர்த்திக் கொள்ள வாழ்க்கை முறைகளோடு இணைத்துப் பார்க்க முடிகின்றது.

"இந்திய சமூகத்தின் பண்டைக் காலத் தொட்டு, கற்பு எண்ணம் கோட்பாடு வாழ்க்கை நெறியாக இருந்து வருகிறது. அதிலும் ஆண்களை விடப் பெண்களுக்கு மட்டுமே இரு உரிய வாழ்க்கை நெறியாக வற்புறுத்தப்பட்டு வருகிறது"[5] புதுவை ஞான குமாரன். எனவே, தமிழில் தோன்றிய இலக்கண, இலக்கிய நூல்களும் பெண்ணுக்கு மட்டுமேயுரிய ஒரு வாழ்நெறியாவே கற்பு நெறியினை வலியுறுத்தி வந்துள்ளன. அதைப் பின்பற்றி ஏராளமான சிறுகதைகள் தோன்றிய வண்ணம் இருந்தாலும், யுகசந்தி என்னும் சிறுகதை இத்தகைய பழமையான கற்புக்கோட்பாட்டை மாற்றி அமைக்கும் தன்மை உடையதாக உணர முடிகின்றது.

**சு.தமிழ்ச்செல்வனின் 'வெயிலோடு போய்' சிறுகதையதில் ஏற்றத்தாழ்வு**

மனித மனம் சிந்தனைகளை உள்ளடக்கியவை. சூழ்நிலைகள், வளர்ப்பு முறைகள், எதிர்பார்ப்பு முறைகள், முயற்சிகள், அதன் முடிவுகள், ஏற்றத்தாழ்வுகள் போன்ற பல கூறுகள் மனித மனச் சிந்தனைகளைப் பாழ்படுத்தவோ, பயன்படுத்தவோ செய்கின்றன. எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு நல்லனவற்றை மட்டுமே தெரிவு செய்யும்

மனிதர்கள் மட்டுமே முன்னேறுகின்றனர். ஏற்றத்தாழ்வை, சாதி, பொருளாதாரம் என்ற அமைப்பின் கீழ் கொண்டு நோக்கும் போக்குடையவர்கள் சாதிப்பதில்லை.

பொருளாதார ஏற்றத்தாழ்வை மையமிட்ட கதையாக சு.தமிழ்ச்செல்வன் 'வெயிலோடு போய்' என்னும் சிறுகதை திகழ்கின்றது. மாரியம்மாளின் ஆத்தாளின் தம்பி மகள் தங்கராசு மீது இளம் வயதில் இருந்து விருப்பமுடைய மாரியம்மாள், கல்வி அறிவு இல்லாததாலும், கிராமத்தில் வளர்ந்ததாலும், பொருளாதாரத்தில் தன்நிறைவு இல்லாததாலும் தான் விரும்பிய தங்கராசுவை மணம் முடிக்க முடியவில்லை. மாரியம்மாளுக்கு அயலூரில் பெட்டிக்கடை வைத்திருக்கும் மணிகண்டனுக்கு மணம் முடித்து வைத்திருந்தார்கள். ஊர் திருவிழாவிற்கு தங்கராசு தன் மனைவியுடன் வருகிறான் என்று கேள்விட்ட மாரியம்மாள் 2 நாட்களுக்கு முன்பாக அம்மா வீட்டிற்கு வந்து விடுகின்றாள். அவள் தங்கராசுவின் மனைவியைப் பார்க்க ஆவலுடன் செல்கிறாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது போல அவன் மனைவி இல்லை அதைக் காட்டிலும் இருவரும் மகிழ்ச்சியாக இல்லை என்பதைக் கேட்டதும் மனமுடைந்து விடுகிறாள். தனக்கு கிடைக்காத தங்ராசு மகிழ்ச்சியுடன் வாழக்கூடாது என்று எண்ணாமல், மிகவும் நல்ல மனிதநேயம் உடைய பெண்ணாக மாரியம்மாளை சுட்டியிருப்பது போற்றுதற்குரியது.

"நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது மனிதநேயம். மனித இனத்தின் நாகரிக பண்பாட்டு வளர்ச்சியோடு மனிதநேயம் பின்னி பிணைந்து உள்ளது. தனக்கு தீங்கு இழைத்தவனாயினும் அவனுக்கு ஒர் துன்பம் நேரும் போது, அவன் அத்துன்பத்திலிருந்து மீள உதவுவதிலேயே உண்மையான மனித நேயம் புதைந்துள்ளது"[6] என்பதை மாரியம்மாள் கதாபாத்திரம் வழி சு.தமிழ்ச்செல்வன் வெளிபடுத்துகிறார். பொருளாதார வளர்ச்சி நிலையைக் கொண்டு மனிதநேயமும் மாறுபடும் என்பதை உலகநெறியாக பார்க்கப்படும் இன்றைய சூழ்நிலையில் சு.தமிழ்ச்செல்வனின் சிறுகதையும் மனிதநேயம் இல்லாத சமூகத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

**முடிவுரை**

தமிழ்ச் சிறுகதைகளில் பண்பாட்டோடு தொடர்புடைய சமூகக் கருத்தாங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றை இன்றைய வாழ்வியலோடு பொருத்தி ஆராய வேண்டிய தேவை இலக்கிய ஆய்வாளர்களுக்க அவசியமானதொன்று. அவ்வகையில் ஜெயகாந்தனின் கதைகள் தொடக்கத்தில் வாசிப்பாளனுக்கு அதிர்ச்சி தரக் கூடியதாகவே இருக்கும். ஆனால், ஆய்வாளனாக இருந்து கதையை வாசித்தால் எதார்த்த உலகும், முற்போக்கு கருத்தும்; ஆளுமையின் தெளிவும் அப்பட்டமாக வெளிப்படும். அதுபோல, சு.தமிழ்ச்செல்வன் கதைகளில் வாழ்வியலின் ஆழத்தை, விளிம்பு நிலை மக்களாக இன்று வாழ்வோரின் வாழ்க்கைச் சூழலை மையமிட்டு புதுவகையானத் தேடல்களை செம்மையாக்கித் தந்துள்ள பாங்கு போற்றுதற்குரியது.

**சான்றெண் விளக்கம்**


1. ராமன் - தமிழ் - இந்தச் சிறுகதைகளில் சமூகம் ப.14
2. ஜ.கிருஷ்ணமூர்த்தி சமூகவியல் கோட்டுபாடுகள் - முன்னுரை
3. ராமன் - தமிழ் - இந்திச் சிறுகதைகளில் சமூகம் ப.12
4. சுசீலா. எம்.ஏ விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் ப.20
5. பெண்ணிய நோக்கில் மேலாண்மைப் பொன்னுச்சாமியின் நாவல்கள் ப.42
6. பதிப்பாசிரியர் பேரா.வெ.சுகந்தா 21-நூற்றாண்டுத் தமிழ்ச்சிறுகதைகள் ஆய்வு ப.115

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2019, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- செப்டம்பர் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879